

*Photo Credit*: Studio Times Ltd.

# தேசிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தியில் காலநிலை மாற்றம் பற்றிய ஆர்வங்களை உட்சேர்த்தல்

2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சமாதானத்துடன், பொருளாதார அபிவிருத்திக்காக பேராவலுடன் புதிய யுகம் ஒன்றிற்குள் இலங்கை நுழைந்தது. எதிர்வரும் தசாப்தத்தில், வறுமை ஒழிப்பிற்கான சகல துறைகளிலும் பாரிய புதிய முதலீடுகளை நாடு மேற்கொள்வதோடு, நடுத்தர வருமானமுடைய நாடாக அதனை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளும். இதற்காக, பேராவலுடன் தேசிய அபிவிருத்தி இலக்குகளை அது வடிவமைத்துள்ளது.

ஆனால், மனிதரால் ஊக்குவிக்கப்பட்ட பூகோள வெப்பமாதலின் விளைவாக ஏற்பட்டுள்ள காலநிலை மாற்ற விளைவுகள் இத்திட்டங்களை தாமதப்படுத்தலாம் அல்லது தடைப்படுத்தலாம். ஏற்கெனவே காணப்படுகின்ற பொருளாதார மற்றும் சமூக -- பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை இது மேலும் மோசமடையச் செய்யலாம். இவ் விளைவுகளில் சில இப்போது வெளிக்காண்பிக்கப்படுவதை நாம் அவதானிக்கத் தொடங்கியுள்ளோம். ஏதிர்வரும் ஆண்டுகளில் மற்றும் தசாப்தங்களில் இந்நிலை மேலும் மோசமடையலாம்.

எமது அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இவ் அழுத்தங்களுக்கிடையே, பொருளாதாரம் மற்றும் சமூகம் என்பவற்றின் சகல துறைகளிலும் காலநிலைக்குத் தாக்குப்பிடிப்பதற்கு மேம்படுத்தலுக்கான அணுகுமுறைகளை நாம் ஒன்றுசேர்த்தல் வேண்டும். எம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, அறிவு, தொழிநுட்பம் மற்றும் நுணுக்கமான திட்டமிடல்கள் என்வற்றின் ஊடாக இவ் விளைவுகளுக்கு தாக்குப்பிடித்தலை உள்ளடக்குகின்ற காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கம் ஒன்று எமக்கு அவசியமாகின்றது.

இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கத்திற்கு இயலளவுகளை வலுப்படுத்துதல்

தேசிய காலநிலை மாற்ற இசைவாக்க உபாயம்

உபாய வழியின் பிரிவு **#1**

# விடயத் தலைப்பு

காலப்போக்கில் காலநிலை மாற்ற விளைவுகள் வெளிப்படுத்தப்பட்டு, அவை சகலரினாலும் பல்வேறு வடிவங்களில் உணரப்படும். எந்த ஒரு தனிநபரோ, சமூகமோ அல்லது துறையோ இதில் இருந்து தப்பிவிட முடியாது. இது ஒரு பொதுவான நெருக்கடியாகவே அமைந்திருக்கும்.

மக்களையும், பொருளாதார ஆர்வங்களையும் பாதுகாப்பதற்கு, சகல துறைகளுக்கும் மற்றும் மனிதச் செயற்பாடுகளுக்கும் மேலெழும் அச்சுறுத்தல் ஒன்றாக காலநிலை மாற்றத்தை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். மற்றுமொரு விதத்தில் குறிப்பிடுவதாயின், தேசிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்திச் செயன்முறைகளில் காலநிலை மாற்ற இசைவாக்கத்தை நாம் உட்சேர்க்க வேண்டும்.

“தேசிய காலநிலை மாற்ற இசைவாக்க உபாயத்தை” விருத்தி செய்வதற்கான பங்களிப்பாளர் மதியுரை பெற்றுக்கொள்ளல் செயன்முறையின் போது, முக்கியத்துவமான பிரச்சினைகள் மற்றும் பதிலுரைப்புக்கள் பல அடையாளங் காணப்பட்டன. இவை ஐந்து பிரதான தலைப்புக்களின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்டன.

### காலநிலை தாக்கம் இன்றிய பொருளாதார திட்டமிடல்

இலங்கை பின்னணியில் காலநிலை மாற்றப் பொருளாதாரம் தொடர்பாக விளங்கிக்கொள்வது வரையறுக்கப்பட்ட விடயம் ஒன்றாகும். காலநிலை மாற்றம் பற்றி அறிந்துள்ள மற்றும் பரவலாகக் கதைக்கப்படுகின்ற அதேநேரம், காலநிலை மாற்ற விளைவுகளில் இருந்து “காலநிலை தாக்கம் இன்றிய” விதத்தில் மக்களை அல்லது பொருளாதாரச் செயற்பாடுகளை பாதுகாப்பதற்கு விசேட சட்டங்களோ, நியமங்களோ மிகக் குறைவாகவே இலங்கையில் காணப்படுகின்றது.

உதாரணமாக, “உபாய சூழல் மதிப்பீட்டு” மற்றும் “சூழல் விளைவு மதிப்பீடு” என்பவற்றிற்கான வழிகாட்டல்கள், காலநிலை மாற்றம் தொடர்பான நேரடிக் கரிசனைகள் எதனையும் உள்ளடக்கவில்லை. பிரதான முதலீடுகள் தொடர்பாகக் காணப்படுகின்ற ஒரேயொரு சூழல்சார் பரீட்சிப்புக்கு இவை மட்டுமே காணப்படுகின்றன. சூழல் நின்று நிலைப்புக் கரிசனைகள் தொடர்பாக பல்வேறு பொருளாதாரத் துறைகள் “உபாய சூழல் மதிப்பீட்டு”/சூழல் விளைவு மதிப்பீடு என்பவற்றிலேயே தங்கியுள்ளன.

### காலநிலை இசைவாக்கம், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கு தேசிய இயலளவுகளை வலுப்படுத்துதல்

காலநிலை மாற்ற இசைவாக்கத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்குத் தலைமை தாங்குவதற்கு, அதன் காலநிலை மாற்றத்திற்கான செயலகத்தின் ஊடாக சுற்றாடல் அமைச்சு பொறுப்புடைமை வழங்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்ற இசைவாக்கத்திற்கு இலக்கு வைக்கப்பட்ட கள மட்டச் செயற்பாடுகள், பலதரப்பட்ட முகவர் நிறுவனங்களினால் விருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். காலநிலை மாற்றத்திற்கான செயலகம் மற்றும் காலநிலை மாற்றத்தை கையாள்வதற்கான ஏனைய முகவர் நிறுவனங்கள் இது தொடர்பாக தற்போது பாரிய இறுக்குதல்களை எதிர்நோக்குகின்றன. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான இலங்கையின் ஆரம்பிப்புக்களை மேற்கொண்டு நடாத்துவதற்கு அரசாங்கத்திற்குள்ளும் அதற்கு மேலும் பணியாற்றுவதற்கு தொழிற்துறை சார்ந்தவர்கள் மற்றும் தலைவர்களின் குழு ஒன்றை நாடு விருத்தி செய்ய வேண்டியுள்ளது..



*Photo Credit*: Studio Times Ltd.

## விடயத் தலைப்பு



Photo Credit: Studio Times Ltd.

### எதிர்கால முதலீடுகளும் பொருளாதாரச் திட்டங்களும் காலநிலைக்கான தாக்குப்பிடித்தற் திறன் கொண்டவையாக இருப்பதை உறுதிப்படுத்தல்

பொருளாதாரத் துறையின் திட்டமிடல் செயன்முறையில் காலநிலை மாற்ற கரிசனைகள் இன்னும் உள்வாங்கப்படவில்லை. காலநிலை மாற்றம் தொடர்பாக பல திட்டமிடலாளர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். என்றாலும், அதற்கான இசைவாக்க தெரிவுகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக போதிய அறிவை இவர்கள் கொண்டிருக்கவில்லை. பொருளாதரத்தில் காலநிலை மாற்றக் காரணிகளை கருத்திற்கொள்வதற்கான தெளிவையும், வழிகாட்டலையும் தற்போது விருத்தி செய்யப்பட்டு வருகின்ற உத்தியோகபூர்வமான காலநிலை மாற்றக் கொள்கை வழங்கவிருக்கின்றது. பூகோள வெப்பமடைதலுக்கான வாயுக்களில் குறைவான அளவை வெளிப்படுத்தும் நாடொன்று என்ற வகையில் காலநிலை மாற்றத்தை குறைப்பதற்கு எவ்வாறு சிறிய இலங்கை பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை பங்களிப்பாளர்கள் ஏற்கெனவே விளங்கிக்கொண்டுள்ளனர். எனவே, காலநிலை இசைவாக்கம், அதற்கான அதிக வளங்கள் மற்றும் எமது ஆர்வங்களை (காலநிலை மாற்ற) விளைவுகளில் இருந்து பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் தொடர்பாகவும் அதிக அவதானத்தை நாம் செலுத்த வேண்டும்.

### காலநிலை மாற்ற இசைவாக்கத் தெரிவுகள் பற்றிய முறையான ஆய்வுகள்

காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுகளும், பகுப்பாய்வுகளும் பல்வேறு நிறுவனங்களினாலும், முகவர் நிறுவகங்களினாலும் ஒருங்கிணைக்கப்படாத முறையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது, வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், பல பல்கலைக் கழகங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்களை உள்ளடக்கியுள்ளது. இவர்களுக்கிடையில் மட்டுப்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்புக்களும், தகவல் பரிமாற்றங்களுமே மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிடல், ஒருங்கிணைப்பு, காலநிலை மாற்றம் தொடர்பான அறிவு மற்றும் பகுப்பாய்வு தொடர்பான தகவல் பரிமாற்றம் மற்றும் பலடையச் செய்தல் என்பவற்றிற்கு சிறப்பானதொரு ஏற்பாடு எமக்கு அவசியமாகின்றது.

### இலங்கையை காலநிலை மாற்ற விளைவுகளில் இருந்து பாதுகாப்பதற்கு நிதி முதலீடுகளை அதிகரித்தல்



Photo Credit: Studio Times Ltd.

தன்னை சரியாக நிலைப்படுத்துவதன் மூலம், காலநிலை மாற்ற இசைவாக்கம் மற்றும் தாக்குப்பிடித்தல் என்பவற்றை விசேடமாக இலக்கு வைத்து குறிப்பிடத்தக்க சர்வதேச வளங்களை இலங்கை கவர்ந்து ஈர்க்க முடியும். என்றாலும், இத்தகைய இவ் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு நிதி அமைச்சினால் வழிகாட்டப்பட்டு, பல்வேறு துறைகளினதும், நிறுவனங்களினதும் தொழிநுட்ப நிபுணர்களால் ஆதரவளிக்கப்பட்ட ஒத்திசைவான முயற்சி ஒன்று அவசியமாகின்றது. இத்தகைய நிதியை ஒதுக்கீடு செய்வதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும் மற்றும் கண்காணிப்பதற்குமான நிறுவன கட்டமைப்பு ஒன்றும் எமக்கு அவசியமாகின்றது.

### காலநிலை இசைவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு பல்வேறு மட்டங்களில் பங்களிப்பாளர்களை விழிப்பூட்டுவதும் அணிதிரட்டுவதும்.

கல்வி முறைமை, ஊடகங்கள் மற்றும் ஏனைய தகவல்களை "பல்கிப் பெருகச் செய்யும் காரணிகளால்" காலநிலை மாற்ற இசைவாக்கம் பற்றிய அறிவு மற்றும் தெளிவுகளை சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் பரம்பலடையச் செய்ய முடியும். இத்தகைய பொதுசன ஈடுபாட்டு முறைகளில் இருந்து உச்ச பயனை பெற்றுக்கொள்வதற்கு இலக்குக் குழுக்களையும் தகவல்களையும் தெளிவாக வரையறை செய்வது முக்கியமானதாகும் - ஒரே "அளவு" எல்லோருக்கும் பொருந்துவதாக அமைவதில்லை. பொது அறிவூட்டலுக்கு மேலதிகமாக, சமூகங்களுக்கும், உள்ளூர் மட்ட வள முகாமையாளர்களுக்கும் காலநிலையினால் ஊக்குவிக்கப்பட்ட பிரச்சினைகளுக்குரிய விசேட தொழிநுட்பத் தீர்வுகளும் அவசியமாகின்றன.



*Photo Credit*: Studio Times Ltd.

**காலநிலை மாற்றத்தின் நிச்சயமற்ற விளைவுகளுடன் வாழ்வது மற்றும் அதற்குத் தாக்குப்பிடிப்பது என்பது தொடர்ந்தும் தெரிவொன்றாக அமையாது; மாற்றமாக அது அத்தியாவசியான விடயம் ஒன்றாகவே மாறியிருக்கின்றது. பொருளாதார அபிவிருத்தி தங்குதடைகள் அல்லது பின்னடைவுகள் இன்றி தொடர்வதற்கு மற்றும் வறுமை ஒழிப்பு, உணவும், நீர் பாதுகாப்பும் மற்றும் பொது சுகாதாரம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் அழிவடையாவண்ணம் பேணப்படுவதற்கு, காலநிலை மாற்றங்களுக்கு இலங்கை இசைவாக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகின்றது.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப உதவிக்கான செயற்திட்டம் ADB TA 7326 SRI: "இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கத்திற்கான இயலளவுகளை வலுப்படுத்துதல்" செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் இத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

நிலையான பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் அதேநேரம், காலநிலை மாற்ற விளைவுகளுக்கு தாக்குப் பிடிக்கும் திறனை இலங்கையில் அதிகரிப்பதற்கு காலநிலை மாற்ற இசைவாக்கத்திற்கான தேசிய உபாயங்களை உருவாக்குதற்காக இலங்கை சுற்றாடல் அமைச்சுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி பணியாற்றுகின்றது. இசைவாக்கங்களை ஏற்படுத்தும் பட்சத்தில், சூழல் முகாமைத்துவத்தின் மேம்படுத்தப்பட்ட விளைவுகள் மற்றும் இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பாளர்களை சிறப்பாகத் தயார்படுத்தப்படுத்தல் என்பற்றை இவ் உபாயம் ஊக்குவிக்கும்.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்:**
காலநிலை மாற்றத்திற்கான செயலகம், சுற்றாடல் அமைச்சு
முதலாம் மாடி, 980/4 A, விக்ரமசிங்ஹ பிளேஸ், அதுல் கோட்டை, கோட்டை, இலங்கை.
தொலைபேசி:: +94 11 2883 481 மற்றும் +94 11 2883 368
இணையம்: http://www.climatechange.lk/adaptation/